1978 செப்டம்பர் 2]

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

* வினு எண் 52—திரு. சு. முத்துசாமி கரையாளர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இளநிலே எழுத்தர் பதவிக்கு தேர்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் தேர்வு எழுதியவர்கள் எத்தனே பேர்?

(இ) தேர்ச்சியடைந்தவர்கள் எத்தனே பேர் ?

(ஈ) தேர்ச்சி அடையாதவர் எவரேனும் நியமிக்கப்பட்டாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னேயன்:

(அ) ஆம்.

(ஆ) 241 பேர் தேர்வு எழுதினர்கள்.

(இ) அதில் 234 பேர் தேர்ச்சி அடைந்தார்கள்.

(ஈ) தேர்ச்சி அடையாதவர்கள் யாரும் நியமிக்கப்படவில்லே.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: தலேவரவர்களே, பல்லவன் டிரான்ஸ்போர்ட்டிலே ஜூனியர் அசிஸ்டெண்டுகளுக்கு எக்சாமினேஷன் வைத்தார்களே, அதை எழுதாதவர்கள் யாருக்கேனும் தேர்வு நடந்திருக்கிறதா? அவ்வாறு இருந்தால், எக்சாமினேஷன் என்று வைத்துவிட்டு, அதற்குப் பிறகு இன்டர்வியூ நடத்தும் பொழுது எல்லோருக்கும் நடத்துவதில் அர்த்தம் என்ன இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னேயன்: தலேவரவர்களே, எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டும்தான் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

திரு. நா. சுந்தரராஜ்: தலேவரவர்களே, இப்பொழுது தனியார் பேருந்துகளில் 'இன்வாய்ஸ் ரைட்டர்ஸ்' என்று தனியாக கண்டக்டர்களுக்கு அப்பால் ஒரு பதவி இருக்கிறது.

அதுபோன்ற நபர்களைப் புதிதாக அரசுப் பேருந்துகளில் அமர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களின் புதுமையான ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் அவர்கள் அவர்களுக்குரிய இருக்கையில் அமர்ந்து கேட்க வேண்டும்.

* வினா எண் 53—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்களுக்கு வீடு கொடுக்கப் பட்டுள்ளது?

(இ) வீடு கிடைக்காதவர்கள் யாராவது உண்டா?

(ஈ) அவர்களுக்கு எப்போது கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) & (ஆ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களில் 36 பேருக்கு பல்லவன் போக்குவரத்துக் கழக குடியிருப்பில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) உண்டு.

(ஈ) வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, வீடுகள் கட்டித் தரும் திட்டம் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தை அமுல் செய்யும் போது மற்ற தொழிலாளர்களும் வீடு கட்டிக் கொள்ள ஏதுவாகும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத் தின்கீழ், கோவையில் வீடுகள் நிறையக் கட்டும்படியான திட்டங்கள் உள்ளன. அவை கட்டப்பட்டும் வருகின்றன. அந்த